செ.வெ.எண் - 04 நாள்: 02.03.2020

# அரியலூர் மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், **“மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்”** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று **(02.03.2020)** நடைபெற்றது.

பின்னர், இக்கூட்டத்தில், பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 471 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் வரிசையில் காத்திருக்காமல், அவர்களுக்கான தனி இருக்கையில் அமர்ந்திருந்த மாற்றுத்திறனாளிகளிடம் 35 கோரிக்கை மனுக்களை பெற்று இம்மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ.7,600/- மதிப்பில் மூன்று சக்கர சைக்கிளினையும், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.5,910/- வீதம் ரூ.11,820/- மதிப்பில் மடக்கு சக்கர நாற்காலிகளையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) ஏழுமலை, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பொம்மி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**